www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி





# அடப்போங்கய்யா...

ஞானம் 07 - ஒலி 23 - 09.06.2024

# தீதும் நன்றும் பிறர் தர வாரா





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

இயேசு கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் ஞான ஒலியின் அன்பான வணக்கங்களும், வாழ்த்துக்களும்.

தன்னைச் சார்ந்திருப்பது தன்மானத்தின் அடிப்படை. எல்லாவற்றுக்கும் மற்றவரின் உதவியையோ, அறிவுரைகளையோ, துணையையோ நாடுவது தன் உயிருக்கு இழுக்கைத்தான் தேடித்தரும் என்பது பாலபாடம். நட்பாக இருந்தாலும், தம்பதியராக இருந்தாலும் தன் நிலையின் மதிப்பையும். ஆளுமையையும் பேணிக்காப்பதும், அதன்படியே வாழ்வதும்தான் நமக்கு பெருமை, மற்றவரும் அதைதான் விரும்புவர். எதற்கும் மற்றவரின் துணையை நாடுகின்றவர்களை யாரும் மதிக்கமாட்டார்கள்.

எலி வலையென்றாலும் தனிவலைதான் எலிக்கே பெருமை சேர்க்கும். அப்படியே ஒருவர் மற்றவரையே சார்ந்திருப்பது ஓர் அடிமை நிலை. அப்படிப்பட்டவர்களை மற்றவர்கள் அடிக்கி ஆளுவார்கள். அங்கு ஆண்டான் அடிமை நிலைதான், அடிமை தன்நிலையையும், மானத்தையும் உணரும்வரை அது நீடிக்கும்.

ஒருவர் எடுக்கும் முடிவுகள் அரைகுறையாக,தவறாகவும் இருந்தாலும், அது அவரது முடிவு என்ற வகையில், அது அவருக்குப் பெருமை சேர்க்கும்.

மற்றவரோடு சேர்நது சுலபமாக ஒருவர், ஒன்றில் வெற்றி பெறுவதைவிட, சிரமமானாலும், சுயமான முடிவுப்படி, தன்னந்தனியாக கடும் உழைப்பில் வரும் வெற்றியோ, தோல்வியோ உலகமே பாரட்டும் மகத்துவமாக இருக்கும்.

உடலளவில் குறையுடையவர்கள், தோற்றவர்கள், அனாதைகள், தாழ்த்தப்பட்டவர்கள், உதாசீணப்படுத்தப்பட்டவர்கள், கொத்தடிமைகள், ஏராளமானவர்களால் பகைக்கப்படுபவர்கள், தனித்து விடப்பட்டவர்கள் இப்படி துன்பங்களின் மத்தியில் வாழ்பவர்கள், போராடுபவர்களுக்கு இயல்பாகவே தன்மானமும் யாருடைய தயவும் இன்றி வென்று காட்டவேண்டும், தான் யார் என்பதை மற்றவருக்கு இந்த உலகுக்குக் காட்டியோ ஆகவேண்டும் என்ற இலட்சிய வெறியும், வேட்கையும் மிக அதிகமாக இருக்கும்.

மற்றவரின் அறிவுரைப்படி மட்டுமே முடிவெடுத்து வாழ்பவர்கள் அதிக துன்பங்களுக்கு ஆளாவார்கள். இந்த

உலகத்தில் இப்படி எல்லாவற்றுக்கும் மற்றவரின் அறிவுரையைக் கேட்டு வாழ்பவர்கள் தான் அதிகம். அவர்கள் 90 சதவீதத்திற்கும் அதிகம் என்று உலகப் புகழ்பெற்ற மனோதத்துவ நிபுணர் திரு.ஸ்காட் பெக் என்பவர் கூறுகிறார்.

ஒருமுறை தன் மனைவியிடம் சண்டைபோட்டுவிட்டு வேதனையோடு இருந்த ஒருவர், ஒரு பூங்காவிற்குச் சென்று சோகமாக உட்கார்ந்திருந்தார். அப்போது அவர் அருகில் இருந்த இவரது வயதுக்கு ஒத்த மனிதர், மிகவும் மகிழ்ச்சியாக பாட்டுப்பாடிக் கொண்டு இருந்தார். அப்போது இவர் அவரிடம், என்ன சார், நீங்க இவ்வளவு மகிழ்ச்சியா இருக்கீங்க, நான் பாருங்க பொண்டாட்டிக்கிட்ட சண்டை போட்டு, அவ தொந்தரவு தாங்காம இங்க சோகமா ஒக்காந்திருக்கேன். அது எப்படி சார் நீங்க சந்தோஷமா இருக்கீங்க..உங்க பொண்டாட்டி சண்டையே போடமாட்டாங்களா? என்று கேட்டார். அதற்கு அவர், சார் எனக்கு ரெண்டு பொண்டாட்டிகள். ரெண்டு வீடு. ஒரு வீட்டுல சண்டைனா, ரெண்டாவது மனைவி வீட்டுக்குப் போயிடுவேன். அல்லது ரெண்டாவது வீட்டுல சண்டைனா நான் மொத வீட்டுக்கு ஓடிடுவேன். அப்படித்தான் என் பொழப்பு போய்ட்டு இருக்கு, அந்த மாதிரி, இன்னொரு கல்யாணம் பண்ணி ரெண்டு வீடு வச்சுக்குங்க, அப்புறம் பாருங்க, ஒரே ஜமாய்தான் போங்க என்றார்.

அவன் சொன்னதக் கேட்டு இந்தாலு, கஷ்டப்பட்டு ரெண்டாவது கல்யாணம் பண்ணிட்டான். ரெண்டு நாள் கழிச்சு அந்த ஆள் மொத பொண்டாட்டி வீட்டுக்கு போனான். அவன் ரெண்டாவது கல்யாணம் பண்ணின விஷயம் மொதப் பொண்டாட்டிக்குத் தெரிஞ்சு போச்சு, ஏன்யா, நான் இருக்கும்போதே எனக்குத் தெரியாம ரெண்டாவது கல்யாணம் பண்ணிட்டியா, போய்யா வெளியே, அவள்டயே போய் ஒட்டிக்க, இந்தப் பக்கம் வந்த நடக்குறதே வேற என்று அவனத் தொரத்தி விட்டுட்டா. போடி, எனக்கா போக்கிடமில்ல, உன்னாலதாண்டி இந்த ரெண்டாவது கல்யாணம் பண்ணினேன். இனிமேல் நான் அங்கதான் இருப்பேன். உன்னய விட அவ ரொம்ப பொறுமைக்காரிடி என்று சொல்லிவிட்டு ரெண்டாவது மனைவியிடம் சென்றான். அப்போது அந்தப் பொண்ணு, மொத மனைவி விஷயம் தெரிஞ்சு, ஏன்யா, மொத ஒரு பொண்டாட்டி இருக்குறத மறைச்சு என்னய ரெண்டாவதா எப்படியா கல்யாணம் பண்ணலாம், பித்தலாட்டக்காரா, போய்யா வெளிய, அவள்டயே போய்டு...இல்ல என்று அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தொரத்திவிட்டுட்டா....

அவன் உள்ளதும் போச்சுடா என்று வெந்து நூலாகி, சாயந்தரமா ஒரு கோயில் மண்டபத்துல ஒரு தூண்ல சாஞ்ச உட்கார்ந்திருந்தான். அப்போது பக்கத்து தூண்ல, அவனுக்கு சில நாட்களுக்கு முன் ரெண்டு பொண்டாட்டி ஐடியாவக் கொடுத்த ஆளு, சோகமாக சாஞ்சு ஒட்காத்திருந்தான். யோவ், நீ யேய்யா இங்க இப்படி சோகமாக ஒக்காந்திருக்க என்று கேட்டார்.

அதற்கு அந்த ஆளு என் ரெண்டு பொண்டாட்டிகளும் தொரத்தி விட்டுட்டாளுக..பல மாசமா ராத்திரில இங்க வந்து படுத்துக்குவேன். என்றானாம். அதற்கு அந்த ஆளு...அப்புறம் ஏன்யா, ரெண்டு பொணடாட்டி கட்டிட்டா சந்தோஷமா இருக்கலாமனு என்ன உசுப்பிவிட்ட என்றான். அதற்கு அந்த ஆளு, நான் ராத்திரியில இங்க தனியா படுத்துக்க பயமா இருந்துச்சு, எனக்குத் தொணைக்கு நீ இருந்தா நல்லாயிருக்கும்னு அப்படிச் ொன்னேன் என்றானாம்.

ஒன்ன வச்சு படாதபாடுபட்டிருந்தாலும் சந்தோஷமா அந்த ஒத்த வீட்டுலயே இருந்திருக்கலாம். இப்ப பழைய குருடி கதவத் தெறடினும் சொல்ல முடியல...அடுத்தவன் பேச்சக்கேட்டு உள்ளதும் போச்சுடா என்று அவன் தலைல அடிக்கிட்டானாம்.

என்ன சாப்படுறது, என்ன டிரஸ் போடுறது, என்ன பைக், கார், செல்போன், டிவி வாங்குறதுனு அடுத்தவங்க ஐடியாவ கேட்டுத் திரிஞ்சா எதுவும் சரிப்பட்டு வராது என்பது உண்மைதான். நாம்தான் முடிவெடுக்கணும்.

சுய ஆளுமையை வளர்ப்பதுற்கு நாம் பள்ளிப் படிப்பு படிக்கின்றோம். அதன் பிறகு..?

# விவிலியம் அறிவோம்





## லேவியர்களின் நகரங்கள்

லேவியர்களுக்கு நிலத்தில் உரிமைச்சொத்து வழங்கப்படவில்லை; ஆண்டவரே அவர்களின் உரிமைச் சொத்து என்ற செய்தி மீண்டும் மீண்டும் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக இணைச்சட்ட ஆசிரியர்கள் இதைப் பல இடங்களில் பதிவுசெய்கின்றனர். அப்படியென்றால் லேவியர்களின்; எதிர்காலம் என்ன? அவர்கள் எங்கே குடியிருப்பார்கள்? போன்ற கேள்விகள் எழுகின்றன, யோசுவா 21 வது பிரிவு இந்தக் கேள்விகளுக்கான விடையைத் தருவதாக உள்ளது. இந்தப் பிரிவு லேவியர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களைப்பற்றிய ஒரு புரிதலை நமக்குத் தருகிறது. லேவியர்கள் குடியிருப்பதற்கு எல்லாக் குலங்களின் நடுவிலும் நகர்கள் ஒதுக்கப்படவேண்டும்; அவர்களுக்கு ஒதுக்கப்படும் நகரங்களுடன் சேர்த்து மேய்ச்சல் நிலங்களும் ஒதுக்கப்படவேண்டும் என ஆண்டவர் மோசேக்கு கட்டளையிட்டிருந்தார் (எண் 35:1-8). ஆண்டவர் மோசேக்குக் கொடுத்த இந்தக் கட்டளை எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது; லேவியர்களுக்கு கொடுக்கப்படும் நகரங்கள் யாவை என்பதை இந்தப் பிரிவு நமக்குக் கூறுகிறது.

இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபின் பெரும்பாலும் விவசாயம் செய்பவர்களாகவும், ஆடுமாடுகளை மேய்ப்பவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் லேவியர்களின் முதன்மையான பணி குருத்துவப் பணியாக இருந்தது. கடவுளுக்குப் பலி ஒப்புக்கொடுப்பவர்களாக, வழிபாடுகளை வழிநடத்துபவர்களாக அவர்கள் செயல்பட்டார்கள். எனவே அவர்களுக்கு விவசாயம் செய்வதற்காக நிலம் ஒதுக்கப்படவில்லை; ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நகர்களையொட்டி மேய்ச்சல் நிலம் கொடுக்கப்படுகிறது. இது ஏன் என்ற கேள்வி நம்மில் எழலாம். லேவியர்கள் குருத்துவப் பணியில் ஈடுபட்டிருந்ததால் பலியிடுவதற்குத் தேவையான விலங்குகளை வளர்ப்பதும், பராமரிப்பதும் அவசியமாக இருந்தது. அந்த விலங்குகளைப் பராமரிப்பதற்கு அவர்களுக்கு மேய்ச்சல் நிலங்கள் தேவைப்பட்டன. அதற்காகவே

லேவியர்களுக்கு மேய்ச்சல் நிலங்கள் வழங்கப்பட்டிருக்கலாம் என நாம் புரிந்துகொள்ளலாம். மேலும் லேவியர்களுக்கு ஒதுக்கப்பட்ட நகர்களில் லேவியர்கள் மட்டுமே குடியிருந்தார்கள் எனக் கூறமுடியாது; ஏனெனில் இந்த நகர்கள் இஸ்ரயேலின் ஏனைய குலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் இருந்தன. எனவே அந்தக் குலங்களைச் சார்ந்தவர்களும் அங்கே வாழ்ந்தார்கள் எனக் கூறலாம். உதாரணமாக, எப்ரோன், செக்கேம் மற்றும் இராமோத்து கிலயாது போன்ற நகர்களைக் கூறலாம். இந்த நகர்களில் வேறு குலங்களைச் சார்ந்தவர்கள் அதிக அளவில் இருந்தார்கள்; மேலும் இந்த நகர்கள் அடைக்கல நகர்களாகவும் இருந்தன என்பதை நாம் அறிவோம். எனவே லேவியர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நகர்களில் பிற குலங்களைச் சார்ந்தவர்களுடன் இணைந்து வாழ்ந்தார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கவேண்டும்.

ஒரு சில அறிஞர்கள் லேவியர் குலத்திற்குக் கொடுக்கப்பட்ட நகர்களைக்கொண்ட இப்பட்டியல் செயற்கையானது என்கின்றனர். இந்தப் பட்டியலின்படி ஒவ்வொரு குலத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பிலிருந்து நான்கு நகர்கள் வீதம் நாற்பத்தெட்டு நகர்கள் லேவியர் குலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குலங்களின் நிலப்பரப்பிலும் நான்கு நகர்களும் அதன் மேய்ச்சல் நிலங்களும் என்பது மிகப்பெரிய நிலப்பரப்பாக இருக்கும். அது சாத்தியமில்லாதது; மேலும் பழைய ஏற்பாட்டில் இந்த லேவியர் அமைப்புகள் செயல்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. எனவே இந்தப் பட்டியல் வரலாற்றுப் பூர்வமானதல்ல; மாறாக தத்துவார்த்தமானது அல்லது ஓர் இலட்சியக் கொள்கையை நோக்கமாகக் கொண்டது என்பது இவர்களின் வாதம். இந்தக் கருத்துக்கு எதிர்மறையான கருத்துள்ள ஒரு சில அறிஞர்கள் இந்தச் செய்தி வரலாற்றுப் பூர்வமானது என வாதிடுகின்றனர். அவர்களின் கருத்துப்படி தாவீது அரசராக இருந்த காலத்தில் நாடு விரிவாக்கம் செய்யப்பட்டது. அப்போது லேவியர்களுக்காக ஒதுக்கப்பட்ட இந்த நகர்கள் அரசு நிர்வாகம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட நகர்களாக, அரசின் மேற்பார்வையில் இருந்த நகர்களாக மாற்றம் பெற்றன என அவர்கள் கருதுகின்றனர். மேலும் இந்த நகர்களின் பட்டியல் மிகவும் தெளிவானதாக உள்ளது; ஏனைய நகர்களின் பெயர்கள் தாறுமாறாகப் பதிவுப்பட்டுள்ள நிலையில் லேவியருக்குக் கொடுக்கப்பட்டுள்ள நகர்கள் தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. எனவே இந்தப் பட்டியல் வரலாற்றுப் பூர்வமானது என்பதை நிரூபிப்பதாக உள்ளது என்கின்றனர். இன்னொரு சாரார் லேவியருக்குக் கொடுக்கப்பட்ட நகர்கள் காலனிகளாக கருதப்பட்ட நகர்கள் என்கின்றனர். காலனிகள் என அழைக்கப்படும் நகர்கள் ஒரு குறிப்பிட்ட மக்கள் வாழ்வதற்காக ஒதுக்கப்பட்ட நகர்கள். லேவியருக்குக் கொடுக்கப்பட்ட நகர்களில் வாழ்ந்தவர்கள் நிர்வாகப் பொறுப்பிலும் வழிபாடுகளை நடத்துவதிலும் பங்குபெற்றார்கள்; குறிப்பாக கிராமப் பகுதிகளில் லேவியர்கள் இந்தப் பணிகளைச் செய்தார்கள் என்பது ஏற்கக்கூடியதாகவே உள்ளது. இன்னொரு சாரார் லேவியர்களின் நகர்கள் குறித்த இந்தப் பட்டியல் தாவீதின் காலத்தில் நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்ட நகர்களின் பட்டியல் என்கின்றனர். எனவே லேவியர்களின் நகர்கள் பற்றிய

பட்டியலைப் பற்றிய விவாதங்களில் இன்னும் ஒரு தெளிவில்லாத நிலை நிலவுகிறது.

இந்தப் பட்டியலின் படி லேவியின் வழிமரபினர் மூன்று குழுக்களாகப்; பட்டியலிடப்படுகின்றனர். அவர்கள் முறையே கோகாத்தியர்கள் (21:3-5), கேர்சோனியர்கள் (21:6), மற்றும் மெராரியர்கள் (21:7) என அழைக்கப்படுகின்றனர். லேவியர்களுக்கு ஒதுக்கப்பட்ட நகர்களில் ஆரோனின் வழிமரபினராகக் கருதப்பட்ட கோகாத்தியர்கள் பதிமூன்று நகர்களையும், கேர்சோனியர்கள் பதிமூன்று நகர்களையும் மெராரியர்கள் பன்னிரெண்டு நகர்களையும் பெறுகின்றனர். லேவியர் குலத்திற்கு கொடுக்கப்பட்ட நகர்களின் மொத்த எண்ணிக்கை நாற்பத்தெட்டு. யு+தா மற்றும் சிமியோன் குலங்களிலின் நிலப்பரப்புகளிலிருந்து ஒன்பது நகரங்களும், நப்தலி குலத்திற்குரிய நிலப்பரப்பிலிருந்து மூன்று நகர்களும் ஏனைய ஒன்பது குலங்களின் நிலப்பரப்புகளிலிருந்து நான்கு நகரங்கள் வீதமும் லேவியருக்கு வழங்கப்பட்டன. லேவியருக்கு வழங்கப்பட்ட நகர்களில்தான் அடைக்கல நகர்களும் இருந்தன என்பதை ஏற்கனவே பார்த்தோம். அடைக்கல நகர்களில் தஞ்சம் தேடியவர்களை விசாரித்து தீர்ப்புகள் வழங்குவதற்கு குருக்களின் இருப்பு முக்கியம் என்பதால் அவ்வாறு செய்யப்பட்டது என நாம் புரிந்துகொள்ளலாம்.

யோசுவா 22 வது பிரிவில் கிழக்கு யோர்தானில் ஏற்பட்ட பிரச்சினைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. யோசுவாவின் தலைமையில் இஸ்ரயேல் மக்கள் கைப்பற்றிய கானான் நாட்டை இஸ்ரயேலின் அனைத்து குலங்களுக்கும் பங்கிட்டு கொடுத்தபின் யோசுவா அனைவரையும் தங்கள் நிலப்பரப்புகளுக்குப் போகப் பணிக்கிறார். யோர்;தானுக்குக் கிழக்கே நிலம் ஒதுக்கப்பட்ட ரூபன், காத்து மற்றும் அரைக்குலமான மனாசே குலங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் செல்கின்றனர். யோசுவா அவர்களுக்கு ஆசி கூறி அனுப்புகையில், உங்கள் முழு இதயத்துடனும் உங்கள் முழு உள்ளத்துடனும் ஆண்டவராகிய கடவுள்மீது அன்பு கூருமாறும், அவருடைய வழிகள் அனைத்திலும் நடக்குமாறும், அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுமாறும், அவரைப் பற்றிக்கொள்ளுமாறும், அவருக்குப் பணிபுரியுமாறும், ஆண்டவரின் ஊழியராகிய மோசே உங்களுக்கு இட்ட கட்டளைகளையும் சட்டத்தையும் நிறைவேற்றுவதில் மிகவும் கவனமாயிருங்கள்' என்று கூறி அனுப்புகிறார். அவர்களும் தங்கள் இடத்திற்குச் செல்கிறார்கள். அவர்கள் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் சென்றதும் யோர்தானுக்கு அருகில் ஒரு பலிபீடம் கட்டியெழுப்புகிறார்கள். ரூபன், காத்து மற்றும் அரைக்குலமான மனாசே குலங்களின் இச்செயல் கடவுளுக்கு எதிராகவும் இஸ்ரயேலின் ஏனைய குலங்களுக்கு எதிராகவும் செய்யப்பட்ட ஒரு துரோகச் செயலாக கானானில் குடியேறிய பத்து குலங்களும் நினைக்கின்றனர். ஏனெனில் இஸ்ரயேல் குலங்களின் பொது வழிபாட்டுத் தலமாக சிலோ உள்ளது. அங்கேதான் ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவரைத் தொழுவதற்கு அனைவரும் அங்கே வரவேண்டும். எனவே யோர்தானுக்குக் கிழக்கில் ஒரு பலிபீடம் அமைப்பது ஆண்டவருக்கு எதிரானச் செயலாகப்

பார்க்கப்படுகிறது.

கானானில் குடியேறிய பத்துக் குலங்களும் ரூபன், காத்து மற்றும் அரைக்குலமான மனாசே குலங்கள் மீது படையெடுத்துச் செல்ல முனைகின்றனர். ஆனால் அதற்குமுன் அவர்களோடு பேசி அவர்கள் பலிபீடம் கட்டுவதற்கான காரணத்தை அறிந்துகொள்ள விரும்புகின்றனர். ஒவ்வொரு குலத்திலிருந்தும் ஒரு தலைவர் தேர்வுசெய்யப்படுகின்றார். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பத்து தலைவர்களும் குரு பினகாசு தலைமையில் கிழக்கு யோர்தானுக்குச் செல்கின்றனர். கிழக்கு யோர்தானில் குடியேறிய குலங்களுடன் பேச்சுவார்த்தை நடக்கிறது. பேச்சுவார்த்தையின் போது பலிபீடம் பலிகள் செலுத்துவதற்காகக் கட்டப்படவில்லை மாறாக ஒற்றுமையின் அடையாளமாக கட்டப்பட்டது என கிழக்கு யோர்தானில் குடியிருக்கும் குலங்கள் கூறுகின்றனர். குறிப்பாகச் சீலோவுக்கு போட்டியாக இந்தப் பலிபீடம் கட்டப்படவில்லை மாறாக பொது வழிபாட்டுத்தலமான சீலோவில் எல்லா குலத்தினரும் ஆண்டவருக்குப் பலிசெலுத்தி வழிபடுவார்கள் என்பதை அறிவிக்கும் சான்றாக இந்தப் பலிபீடம் கட்டப்பட்டுள்ளது என்கின்றனர். பினகாசு தலைமையில் சென்ற தலைவர்களுக்கு அவர்களின் கருத்து ஏற்புடையதாகத் தெரிகிறது. எனவே அமைதியுடன் அவர்கள் திரும்பி வருகின்றனர்.

யோசுவா 22 வது பிரிவின் மையமாக இரண்டு பிரச்சினைகள் உள்ளன. முதலாவது, யோர்தானுக்கே கிழக்கே உள்ள பகுதியும் வாக்களிக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதி என ஏற்றுக்கொள்வதில் சிக்கல் இருப்பதாகத் தெரிகிறது. யோசுவா 22:19 இல் கானான் நாடு ஆண்டவருக்கு உரிய நிலமாகவும் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதி தூய்மையற்ற நிலமாகவும் கருதப்படுகிறது. தூய்மையற்ற நிலம் என்ற சொற்றொடர் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியை பிறஇனத்தாரின் நிலமாகக் கருதுவதாகத் தெரிகிறது. எனவே யோர்தானுக்கு கிழக்கே உள்ள நிலமும் ஆண்டவருக்கு உரிய நிலம் என அழைக்கப்படவேண்டும் என்ற ஒரு போராட்டம் இருப்பது தெரிகிறது. இதனால் தான் ரூபன், காத்து மற்றும் அரைக்குலமான மனாசே குலங்கள் யோர்தானுக்கு அருகில் ஒரு பலிபீடம் ஒன்று அமைக்கின்றனர். அந்தப் பலிபீடம் ஒரு அடையாளச் சின்னமாக அமைக்கப்படுகிறது. இரண்டாவது பிரச்சினை பலிபீடப் பிரச்சினையுடன் தொடர்புடையது. அநதப் பிரச்சினை இஸ்ரயேல் குலங்கள் ஆண்டவரை வழிபடுவதற்காக பொது வழிபாட்டுத்தலத்தைக் கொண்டிருத்தல் பற்றியதாகும். இஸ்ரயேலின் குலங்கள் கொது வழிபாட்டுத்தலத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்ற கருத்து இணைச்சட்ட மரபிலிருந்து வரக்கூடிய கருத்தாகும். இஸ்ரயேல் குலங்களின் பொது வழிபாட்டுத் தலமாக அப்போது சீலோ இருந்தது. பிற்காலத்தில் கி.மு. 7வது நூற்றாண்டில் யோசியா யு+தாவை ஆட்சி செய்த காலத்தில் எருசலேம் பொது வழிபாட்டுத்தலமாக மாற்றப்பட்து. ஏனைய வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் இடிக்கப்பட்டன. இந்தச் சீர்திருத்தங்கள் இணைச்சட்ட மரபிலிருந்துதான் வருகிறது.

பயணம் தொடரும்,

அருட்பணி.முனைவர்.

ஆ.அலெக்ஸ் cmf



அருட்தந்தை.ஸ்டீபன் கஸ்பார்.
புனித.சகாய மாதா ஆலயம், சின்னாளபட்டி, திண்டுக்கல் மறைமாவட்டம்.

# பொதுக் காலம் 10ம் ஞாயிறு -09.06.2024

## தொடக்க நூல் 3/9-15, 2 கொரிந்தியர் 4/13/1-15, மாற்கு 3/1-35

இறை இயேசுவில் எனக்கு மிகவும் பிரியமான தகோதர, சகோதரிகளே, தொடக்க நூலில் இன்றைய முதல் வாகத்தில் 3/15ல் உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவோம் என்ற வாக்குப்படி அலகையோடு இயேசு போராடி இறுதிவரை நிலைத்து நின்று தந்தையின் விருப்பத்தில் நிறைவு கண்டார். நம் விருப்பங்களுக்கும், இலட்சியங்களுக்கும் மேலாக, இறைவிருப்பத்தை ஆய்ந்தறிந்து தேவையற்ற விமர்சனங்களையும கடந்து வாழ அழைக்கும் இறைவார்த்தையை உள்வாங்கி வாழ்வாக்கிட நம்மை அழைக்கும் இறைவனின் குரலுக்குச் செவி கொடுப்போம்.

அன்பான இறைச்சமூகமே மனித உறவுகளில் சகமனிதர்களின் விருப்பங்களை நிறைவு செய்கிற மனிதன இறைவனின் விருப்பத்தை நிறைவு செய்கிறான். கடவுளின் விருப்பப்படி நடக்கிறவன் எவனோ அவனே என் சகோதரனும், சகோதரியும். தாயுமாவான் என்று இன்றைய நற்செய்தியில் 3/35ல் இயேச பேறு பெற்றவன் என்கிறார்.

அன்பான இறைச் சமூகமே ஒரு மனிதன் தன் சிந்தனை, சசொல். செயல்ண. உழைப்பால் பிறரின் விருப்பங்களில் நிறைவு காணும்போது. கவுளின் நிறைவு காண்கிறான். இதை விவிலியத்தை புரட்டிச் சிந்திப்போம். இஸ்ரயேல் இனத்தின்முதல் அரசன் சவுல். இவன் கடவுளின் விருப்பப்படி வாழாது, எதிராக செயல்பட்டான். இவன் அழிவைத் தேடிக் கொண்டான் என்று 1 சாமு 31/4ல் பார்க்கின்றோம். இறுதியில் இவன் தற்கொலை செய்து கொண்டான். இவனுடைய பிள்ளைகளும் அழிந்து போவதாக வரலாறு கூறுகிறது.

ஆனால், அவனுக்குப்பின்னர், இஸ்ரயேலை ஆண்ட அரசன் தாமிது, 46 ஆண்டுகள் ஆண்டான். இவன் கடவுளின் விருப்பத்தை நிறைவு செய்து மெசியாவி ன் பரம்பரைக்குத் தந்தை என்று போற்றிப் புகழப்பட்டான். கடவுளின் வார்த்தை இறைவாக்கினர் நாத்தான் மூலம் தெரிவிக்கப்பட்டபோது, அதன்படி செயல்பட்டான். அவருடைய பேரும் புகழும் அழியாமல் நிலைத்து நின்றது.

ஆம, அன்பான இறைச் சமூகமே, விசுவாச்தின் தந்தை என அழைக்கப்பட்ட ஆபிரகாம் இறைனின் திட்டத்தை நிறைவேற்ற மறுப்பு சொல்லாது, யாவே காட்டிய நாட்டுக்குப் போனார். கடவுளின் விருப்பத்தை நிறைவு செய்ய தன் குடியுரிமையை, பாதுகாப்பை, உடைமைகளை, உறவுகளைத் துறந்தார். இறைவன் காட்டிய நாட்டை

நோக்கிச சென்றார் . அந்நாட்டில் கானானியர் வாழ்ந்தனர். யாவே கடவுள்ழ ஆபிரகாமுக்குத் தோன்றி உன் வழிமரபினருக்கு இந்த நாட்டைக் கொடுப்பேன் என்று வாக்குறுதியளித்து, தன் ஆசீரை அளித்தார். (தொ.நூ 12/7)

அதேபோல மோசேயை அழைத்தார். அவரின் குரலைக் கேட்டு, இஸ்ரயேலின் தந்தையையும், பசியையும் போக்க, கடவுள் காட்டிய கானானைக் கண்டடையத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு கடவுளின் திட்டத்தில் பேறு பெற்றவரானார் என வி.ப 16/17 சொல்கிறது.

கடவுளின் திட்டத்தை நிறைவேற்றும்போது பல இன்னல்கள், இக்கட்டுகள் விமர்சனப் புயல்கள் இவற்றைச் சந்தித்தித்துத்தான் ஆகவே வேண்டும். அவை சிறிது காலம் மட்டுமே. ஆனால், அவை ஈடு இணையற்றவை மாட்சியைத்தரும். அம்மாட்சிமை நீடித்து நிலைக்குமென இன்றைய 2ம் வாசகம் நமக்குச சொல்லுகிறது.

கடவுளின் விருப்பத்தில் நிறைவு காண்போம்.வாழ்வின் நூலில் இடம் பெறுவாரென (தி.வெ 21/27) சொல்கிறது. கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றிய யோபு பல இன்னல்களை எதிர்கொண்டார்.

கடவுளின் திருவுளத்தை ஆகட்டும் என்ற சொல்லால் நிறைவு செய்த நம் அன்னை மரியாள், ஆண்டவரின் அன்னையாக உயர்த்தப்பட்டார். விண்ணுக்கும், மண்ணுக்கும் அரசியாக உயர்த்தப்பட்டார் என திருஅவை கூறுகிறது.

இயேசுவின்மீது கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்தித் தன் பணி வாழ்வில் வரும் இன்னல், இக்கட்டு, இடையூறுகள் நம்மைச் சூழ்தாலும் கிறிஸ்துவின்மீது கொண்ட நம்பிக்கையில் தளராதவருக்கு இறைவன்தரும் நிலைவாழ்வு உறுதி என்னும் அதைத் தாம் தூய ஆவியாரே இந்நிலை வாழ்வினுடைய அடித்தளமாய் இருக்கிறார் எனவும் பவுலடியார் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தியிலே இயேசு ஆண்டவர், இதோ என் தாயும், சகோதர, சகோதிகளும். இவர்கள் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் தாயும், சகோதரிகளும் ஆவர் என்கிறார்.

நற்செய்தியின் 2ம் பகுதியிலே இயேசு உறவிற்குப் புதிய பரிணாமம் தருகிறார். இயேசு யார் என் தாய்? என்பது மரியாவுக்குச் சொல்லப்பட்டதல்ல. மாறாக தம் சீடுக்குச் சொல்லப்பட்டவை. யார் இயேசுவுக்கு நெருக்கமானவராய் இருக்க முடியும்.குடும்த்தால் ஏற்படம் உறவைவிட இறைத் திருவுளத்தை நிறைவு செய்வதால் ஏற்படும் உறவுகளே சிறந்தவை என்கிறார்.

இங்கே நிற்றுகொண்டிருக்கும் என் தாயைப் புறக்கண்களால் பார்க்காமல் அகக்கண்கொண்டு பாருங்கள். என் தாய் இறைவார்த்தையைக் கருவிலேயே தாங்கி, ஆகட்டும், உம் சொற்படியே நிகழட்டும் என்றவர். ,இறைத்திருவுளத்தை நிறைவேற்றிடத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தவர். எனவே, இவர் உடல் ரீதியாக மட்டுமல்லாமல், கடவுளின் சீடத்துவக் குடும்பத்திலும் இவரே உயர்ந்த தாய். கடவுளுடைய திருவுளத்தை நிறைவு செய்து அவரது மீட்பையடைந்தோர் குடும்பத்திலே இணைவது என்பது அவ்வளவு எளிதானது அல்ல. பல நெருக்கடிகள், விமர்சனங்ளைச் சந்தித்தே ஆகவேண்டும. இறையாட்சியைக் கட்டி எழுப்புவதே, இறையாட்சிக் குடும்பத்தின் உறுப்பினராவதற்கு சாட்சியமாகும்.

அன்பான இறைச்சமூகமே,இந்த மண்ணகக் கூடாரம் தற்காலிகமானது. எளிதில் அழியக்கூடியது. இறைத் திருவுளத்தை நாம் நிறைவேற்றுகையில் நமக்குக் கடவுளிடமிருந்து கிடைக்கும் ஒரு வீடு விண்ணுலகில் உண்டு என்றால் அதுவே நம் தாய்நாடு என்கிறார் பவுல்.

இறுதியாக தீய சக்திகளோடு நாம் சமரசம் செய்யாது, இறைத் திருவுளத்தைப் புரிந்து அறிந்து அதை நிறைவேற்ற நாம் இறையாட்சியின் குடும்பத்தினராகிட முயல்வோம்.

நாமும் அன்னை மரியாளைப்போல நம்பிக்கை உறவை ஆழப்படுத்தி இறை உறவில் வாழ்ந்து இறைத்திருவுளத்தை நிறைவேற்றிட அருளை ஆண்டவரிடம் இறைஞ்சிடுவோம். ஆமென்.



# பொதுக்காலத்தின் 10-ஆம் ஞாயிறு

தொ நூ. 3 : 9-15 2 கொரி. 4 : 13 - 5:1
மாற். 3 : 20-35

**09-06-2024**




பா. சேவியர்
மரியநாதபுரம்,
திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

உண்மைக்குச் சான்று பகர்பவர்களாய் வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள இயேசுவின் உண்மையான உறவுகளே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 10-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

பொய்மையிலிருந்து விடுபட்டு, உண்மையில் கலந்து, உண்மையாய் வாழ இன்றைய வாசகங்கள் அழைக்கின்றன. தவறு செய்த மனிதன், அந்தத் தவறை உணர்ந்து அதை ஏற்றுக் கொள்ளும்போது அவன் பொய்மையிலிருந்து விடுபட்டு உண்மைக்குச் சான்று பகர்பவனாகிறான் என்ற உண்மையை உரக்கச் சொல்கின்றன.

இயேசுவின் உண்மையான உறவினர் யார் என்ற கேள்வியை முன்னெழுப்பி நம்மைச் சிந்திக்க அழைக்கிறது இன்றைய நற்செய்தி.

கடவுளின் திருவுளத்திற்கும் இயேசுவின் விழுமியங்களுக்கும் எதிராக செயல்படுபவர்களும் நற்செய்திக்குத் தடையாய் இருப்பவர்களும் ஒருபோதும் இயேசுவின் உறவினராய் இருக்க முடியாது.

மரியா கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப வாழ்ந்ததால்தான் இயேசுவிற்குத் தாயாகும் பெரும் பேறு பெற்றார். கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களாக வாழ்ந்து இயேசுவின் உறவினராக மாற இறையருளை இத்திருப்பலி வழியக வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

கடவுளின் கட்டளையை மீறி விலக்கப்பட்ட கனியை உண்ட நம் ஆதிப் பெற்றோர் தங்களது தவறுக்குப் பொறுப்பேற்காமல் ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்துவதை விளக்குகிறது இன்றைய முதல் வாசகம். கீழ்ப்படியாமையாலும் பொறுப் பின்மையாலும் வஞ்சகத்தாலும் விளையும் விளைவுகளை படம் பிடித்துக் காட்டும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆண்டவர் இயேசுவை உயிர்த் தெழச் செய்த கடவுளே நம் எல்லோரையும் உயிர்தெழச் செய்வார் என்ற நம்பிக்கை விதைகளை நம் நெஞ்சங்களில் விதைக்கிறார் பவுலடியார். யாக்கை நிலையானதல்ல விண்ணுலக வாழ்க்கையே நிலையானது என்பதை எடுத்து ரைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.


## மன்றாட்டுகள்

1) அமைதியும் ஆறுதலும் கொடுக்க வல்ல அன்பு இறைவா, இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றி, மன மாற்றம் பெற்று கிறிஸ்துவின் உறவினர்களாய் வாழ உலக மாந்தரை நெறிப்படுத்தி வழி நடத்தும் உம் திரு அவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர் களுக்கு நல்ல உடல் நலத்தையும் ஆன்ம பலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) ஞானத்தின் ஊற்றே இறைவா, புதிய கல்வி ஆண்டில் கால் பதிக்கின்ற மாணவ மாணவியர் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் நல்ல உடல் நலம், சிறந்த ஞானம், நிறைந்த அறிவு, உயர்ந்த ஒழுக்கம், இறை பக்தி போன்றவற்றை அவர்கள் மீது பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) இரக்கத்தின் தெய்வமே இறைவா, இத்திருப்பலியில் பங்கேற்க வந்திருப் போர், மற்றும் உடல் நோயினால் வர இயலாதவர் அனைவரையும் ஆசீர் வதியும். இவர்கள் ஒவ்வொருவரின் தேவைகளை நீர் ஒருவரே நன்கு அறிவீர். அவற்றை உம் திருவுளத் திற்கு ஏற்றபடி கொடுத்து அவர்களின் வாழ்வை வளம் பெறச் செய்திடவும், நோயாளிகளை உம் அருட்கரத் தினால் தொட்டு குணமாக்கிடவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) அன்பு இறைவா, கீழ்ப்படியாமை யாலும் பொறுப்பின்மையாலும் வஞ்சகத்தாலும் பாவம் இப்பூமியில் கால் பதித்தது என்பதையும், பாவங்கள் வழியே துன்பங்களும் துயரங்களும் நுழைந்தன என்பதை யும் நாங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து, அனைத்து பாவ நாட்டங் களையும் விட்டொழித்து உமக்கேற்ற பிள்ளைகளாக வாழ்ந்து நிலையான விண்ணுலக வாழ்வைப் பெற்று மகிழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

நடிக்கத் தெரியாத அன்பு
கோபமாகத்தான் வெளிப்படும்

உறவுகளை நேசிக்கத் தெரிந்த அளவுக்கு
விலகி நிற்கவும் கற்றுக்கொள்ளுங்கள் ஏனென்றால்
இந்த உலகம் போலியானது.

உண்மை, நேர்மை உள்ள இடத்தில்
சட்டங்களுக்கு வேலையில்லை. –பாப் டைலான்

நமக்குத் தகுதியற்ற எதுவும் பின்தொடரத் தகுதியற்றவை.
அது எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும்

யோசிக்காமல் எடுக்கும் முடிவுகள் அனைத்தும்
யோசிக்க வைத்துக்கொண்டே இருக்கும் வாழ்நாள் முழுவதும்.

இவ்வுலகம் கொடுக்கும் கைகளையே நோக்கும், விரும்பும், மதிக்கும்
அக்கரங்களுக்குப் பின்னாலுள்ள இரக்கம் நிறைந்த மனிதனையல்ல.

ஞானி எதுவும் தெரியாது என்பார்
ஞான சூன்யம் அனைத்தையும் அறிந்தவர் என்பார்.

ஒரு நெல்லை பல கோடி நெற்களாக்கும்
மண்ணைவிடவா, அட்சய பாத்திரம் அபூர்வமானது.

உன் அடையாளத்தை உலகம் உணரும்வரை
உன்னைப் பற்றிய விமர்சனம் ஒவ்வொன்றும் எதிராகத்தான் இருக்கும்

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

மரத்தை மறைத்தது மா மதயானை மரத்தில் மறைந்தது மாமத யஸனை
பரத்தை மறைத்தது பார் முதல் பூதம் பரத்தில் மறைந்தது பார்முரல் பூதமே

சொல் விளக்கம்:
மா – பெரிய, பரம் – பரம் பொருள்(இறைவன்), பார் – பூமி, பூதம் – மண், நீர், நெருப்பு, காற்று, மற்றும் ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்கள்.

'மரத்தை மறைத்தது மாமத யானை' என்னும் திருமந்திர பாடல் பாடியதன் காரணம் :

ஒரு கோவிலுக்கு யானை உருவம் செய்து வைத்தான் ஒரு மரத்தச்சன். அதனைப் பரீட்சிப்பதற்காக இன்னொரு தச்சன் போனான். அவனோடு அவனுடைய குழந்தையையும் அழைத்து சென்றான். அவனது குழந்தை யானையைப் பார்த்ததும் பயந்தது. மரயானையைப் பரீட்சிப்பதற்காக அதன் தந்தை தச்சன் நெருங்கிய போது குழந்தை, அப்பா யானைக்கிட்ட போகாதே, அது முட்டும் என்று கத்தியது. தச்சன் குழந்தையிடம் இது மர பொம்மைதான் முட்டாது என்று சொல்லி சமாதானம் செய்து அதையும் அந்த மரயானைக்கு அருகில் அழைத்துப் போனான். குழந்தைக்கு அந்த வாகனம் (சிலை அ உருவம்) அசல் யானையாகவே இருந்தது. அது மரம் என்கிற ஞானத்தை குழந்தைக்கு அறிவு மறைத்தது.

அதே சமயத்தில் அது உண்மையான யானை மாதிரி இருந்தும் கூட தச்சன் பயப்படாததற்கு காரணம், அவனை பொருத்தமட்டில் அது மரம் தான் என்கிற அறிவு.

யானை வேறு ; மரம் வேறு இல்லை என்பது போல் இறைவன் வேறு; உலகம் வேறு இல்லை என்று இப்படி ஒரு பார்வையைக் காட்டி விளக்குகிறார் திருமூலர். பரம்பொருள் என்கிற மரத்தினாலேயே ஆனது தான் இந்த உலகம் என்கிற பொம்மை. பொம்மையில் மரம் தெரியாதது போல, நமக்கு உலகத்தில் பரம்பொருளாகிய கடவுள் தெரிவதில்லை.

நம் பார்வையில் பார் முதலான பஞ்சபூதங்கள் பரம்பொருளான இறைவனை மறைத்து விட்டன. ஞானிகளுக்கோ எல்லாம் கடவுள்மயமாகவே தெரிகிறது. அவர்களுக்கு பார் முதல் புதங்கள் மரத்தில் மறைந்து போய் விடுகின்றன. 'சூரியன் போனால் கூட பாதகம் இல்லை; ஞான ஒளி நம்மை விட்டு ஒருபோதும் போக விடக்கூடாது' என்பதில் கருத்தாய் இருக்கிறார்கள்.

இவ்வுலகில் மனிதர்கள் ஆகிய நாம் பணம், பதவி என்கிற போட்டி மனப்பான்மையிலேயே வாழ்ந்து நிலை வாழ்வை இழந்து விடுகிறோம். எல்லாம் தனக்கு மட்டும் கிடைத்து விட வேண்டும் என்கிற எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருப்பதால், இவ்வுலகத்தில் கடவுள் இருக்கிறார் என்பது எவருக்கும் தெரிவதில்லை. கடவுள் ஒவ்வொருவரையும் படைத்திருக்கிறார் என்ற எண்ணமும் வருவதில்லை. தான் மட்டும் வாழ வேண்டும் என்கிற ஒரு நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒவ்வொருவருக்கும் பரத்தில் கடவுள் தெரிவதில்லை படைத்தவர் கடவுள் என்றும் தெரிவதில்லை.

ஒருவரை ஒருவர் நேசிப்போம். மற்றவர்களுக்காக ஜெபிப்போம்.
இயேசுவுக்கே மகிமை, லீமா விக்டோரியா.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

குறள் 98

சிறுமையுவு நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்



## குறள் விளக்கம்

பிறர்க்குத் துன்பம் விளைவிக்குதம் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுமைக்கும் இம்மைக்கும் வழங்குவோனுக்கு இன்பம் தரும்

## சிந்தனை

நாம் உதவி செய்யாவிட்டாலும் உபதிரவம் செய்யாமல் இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். நல்லது செய்ய முடியாவிட்டாலும் கூட பரவாயில்லைல தீமை செய்யாமல் இருக்க வேண்டும். இக்குறளில் பயனுள்ள செயலும் பண்பான சொல்லும் சிறந்தது என்று வள்ளுவர் கூறுகின்றார். சிறுமையற்ற நல்ல சொற்களைச் பேசினால் அது அவருக்கு இந்த வாழ்க்கையிலும் மறுவுலக வாழ்க்கையிலும் புகழ் சேர்க்கும் என்று குறிப்பிடுகின்றார்.
வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் வருகின்ற கட்டளைகள் பெரும்பாலும் பொய் சொல்லாதே களவு செய்யாதே (வி.ப 20: 15) என்று தான் இருக்கும். எவற்றை தவிர்த்து வாழ வேண்டும் என்றிருக்கும். இவற்றை தவிர்த்தால் மட்டும் ஒருவன்; நல்லவனாகிவிட முடியுமா? புதிய ஏற்பாடு நீ உன்னை அன்பு செய்வது போன்று பிறரை அன்பு செய்ய வேண்டும், மன்னிக்க வேண்டும், இரக்கம் காட்ட வேண்டும். இவை எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்கிறது. இவ்வாறு நல்லதையே பேசி விண்ணகத்தைப் பெறுவோம்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm